

ஸ்ரீ :
ஸ்ரீ கநகவல்லீ நாயிகா சமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம :

# எவ்வுள் கிடந்தான்

Monthly News Letter From
SRI VEERARAGHAVA SWAMY DEVASTHANAM,

Thiruvallur - 602001.
Ph : 2766 0378

ரூ.4/-

ஜுலை மாதம் 2016 துர்முகி ஸ்ரீ
ஆனி - ஆடி மீ மலர் 1 இதழ் 9

ஸ்ரீகிங்க்ருஹபுராதீசம் ஸ்வர்ணவல்லீ ஸமந்விதம் சாலிஹோத்ர முநே: வந்த்யம் வீரராகவம் ஆச்ரயே |
மங்களம் ராகவேந்த்ராய மதுகைடபஹாரிணே வீரராகவ! வைத்யாய துப்யம் பவது மங்களம் ||
ஆதிவண்சடகோபாதி யதிவர்ய ஸ்துதாய தே வீரராகவ வைத்யாய நித்யஸ்ரீ : நித்ய மங்களம் |
இதி நாராயணாக்யேந சடஜித் யோகிநா க்ருதம் மங்களம் கிங்க்ருஹேசஸ்ய படதாமஸ்து மங்களம்||

ஸ்ரீ கநகவல்லீ நாயிகா சமேத ஸ்ரீ வீரராகவ பரப்ரஹ்மணே நம : ||
ஸ்ரீமதே ராமாநுஜாய நம : ||
ஸ்ரீ வேதாந்த குரவே நம : ||

## ஸ்ரீ அஹோபில மடம்

## ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தா

## 46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின்

# அறுபத்து ஒன்றாவது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

திருமலை, துர்முகி ஸ்ரீ ஆனி மீ 24ம் தேதி



ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானத்தின் பரம்பரை தர்மகர்த்தாவும் ஸ்ரீ அஹோபிலமடம் தலைமைப்பீடத்தில் எழுந்தருளியிருப்பவருமான 46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர்

**ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத யதீந்திர மஹாதேசிகனுடைய**

அறுபத்து ஒன்றாவது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருமலையில் உள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் துர்முகி ஆனி மாதம் 24ம் தேதி (08-07-2016) வெள்ளிக்கிழமை அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. பக்தகோடிகள் யாவரும் இந்த மஹோத்ஸவத்தில் திரளாகப் பங்குகொண்டு ஸ்ரீமாலோலனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் ஸேவித்து பலமந்த்ராக்ஷதையைப் பெற்றுப் பயனடையுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப்படி ஸ்ரீ நியமனம்
இளநகர் கதாதரபுரம் சக்ரவர்த்தி
**C.C. ஸம்பத்**
கௌரவ ஏஜெண்ட்

# மன்மத மகானும் மன்மத ராஜனும்

புரிசை ஸ்ரீ.உ.வே. ஸ்ரீதராச்சாரியார், அர்ச்சகர், திருவள்ளூர்.

மன்மத வருஷத்தில் மிதுன லக்னத்தில் மகா நக்ஷத்ரத்தில் அவரித்து மகாரவாச்யனான நம்போல்வாரை **மாரிமலை முழைஞ்சில் மண்ணிக்கிடந்துறங்கும்** ந்ருஸிம்மராகவன் திருவுள்ளத்தில் இருக்க செய்து அவனருளால் நம்மை உஜ்ஜீவிக்கும் மஹான் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ப்ருதாலங்க்ருதரான ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாப தேசிகனின் 61வது திருநக்ஷத்ர பூர்த்தி உத்ஸவம் விசேஷமாக திருமலையில் நடைபெறுகிறது.

ஸ்ரீமத் அழகியசிங்கர் பூர்வாச்ரம காலத்தில் பூந்தமல்லியில் அத்யயனம் செய்யும் காலங்களிலேயே திருவள்ளூருக்கு எழுந்தருளியிருந்து ஸ்ரீ வீரராகவன் மங்களாசாஸனம் செய்து இருக்கிறார். (பூர்வாச்ரம மாதா மஹாதிகளுக்கு ஸ்ரீ வீரராகவன் குலதெய்வம்). ஸ்ரீ வீரராகவன் தேவஸ்தானத்தில் பரம்பரை தர்மகர்த்தாவாக இருக்கும் ஸ்ரீமதழகியசிங்கர் தன் பட்டாபிஷேகத்திற்குப் பிறகு ஸ்ரீராகவனுக்கு பல வியக்கத்தகு கைங்கர்யங்கள் பண்ணியுள்ளார். இதில் சிலவற்றை இங்கு விக்ஞாபிக்கிறேன். 34ம் பட்டம் ஸ்ரீமத் அத்திபட்டு அழகியசிங்கரால் ஸமர்பிக்கப்பட்டு மிகவும் கிலமாக இருந்த திருத்தேரை ஸ்ரீமத் வில்லிவலம் அழகியசிங்கர் திருவுள்ளமுகக்கும் படியாக நன்றாக ஜீர்ணோத்தாரணம் செய்து ஏறக்குறைய புதிய திருத்தேர் மாதிரியாக ஸ்ரீராகவனுக்கு ஸமர்பித்து தானே வடம்பிடித்து இழுத்து ரதோத்ஸவத்தை நன்றாக நடத்திவைத்தாயிற்று. ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கரால் கட்டப்பட்டு ஸ்ரீவீரராகவன் சித்திரை ப்ரம்மோத்ஸவகாலத்தில் எழுந்தருளும் தானப்பநாயகன் மண்டபத்தின் பாக்கியிருந்த இடங்களில் அத்புதமான கோசாலையும் நிர்மாணித்து கோசம்ரக்ஷணையுடன் வெண்ணையுண்டானுக்கு தினமும் க்ஷீர, ததி, நவநீதங்களை ஸமர்பித்தாயிற்று. அத்துடன் அழகிய நந்தவனத்தையும் ஏற்படுத்தி தண்டகாரண்ய வாஸனான தன்னடியார்க்கினியனுக்கு வன போஜன உத்ஸவத்தையும் அடியார்கள் அனைவரையும் ஆனந்த பரவசமடையும்படி நடத்தி வைத்தாயிற்று.

## மன்மத ராஜனுக்கு மன்மத வருஷத்தில் மஹாஸம்ப்ரோக்ஷணம்

மன்மத மஹானின் ஆத்யக்ஷத்தில் அத்யத்புதமாக நடைபெற்றது. வீக்ஷாரண்ய நிவாஸ விஜயகோடி விமான விசேஷ ஸந்நிஹிதசாக்ஷாத் மன்மத ஸத்ருச வீக்ஷேஹ வீரராகவ புருஷனுக்கு ஸ்ரீமத் அழகியசிங்கர் கோவில் பூராவும் ஜீர்ணோத்தாரணம் செய்து குறுகிய காலஅவகாசத்தில் மிகவும் நேர்த்தியாக வேலைகளை முடித்து மன்மத வைகாசி திருவோண திருநாளில் மஹாஸம்ப்ரோக்ஷணத்தை நடத்தி ஆஸ்திகர்களை ஆனந்தப்படவைத்தாயிற்று இத்திருநாளில் ஸ்வர்ணவல்லி ஸமேதனான ஸ்ரீராகவனுக்கு ஸ்வர்ணத்தட்டு ஸமர்பித்தும் தேவஸ்தான கைங்கர்யபரர்கள் அனைவருக்கும் ஸ்வர்ணடாலரும் அனுக்ரஹித்தாயிற்று.

விசாலோத்துங்க வக்ஷஸை உடைய வீரராகவனின் ஹ்ருத்தாபத்தை குறைத்த ஹ்ருத்தாபனாசரான ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கரின் ஹ்ருத்தாபத்தையும் நிவர்த்தி செய்து ஸ்ரீராகவனை ஹ்ருத்தாப ஸரஸ்தீரவாஸனாக்கியதும் இந்த மன்மத வருஷத்தில் தான்.

பல வருஷங்களாக முயற்சித்து வந்த இந்த புஷ்கரணி புண்யகாரியத்தில் தன்பாதக்காணிக்கையும் ஸமர்பித்து அரசாங்க உதவியையும் பெற்றுத்தந்து 60 வருடமாக வற்றியிருந்த புஷ்கரணியில் பூர்ணமாக ஜலம் நிரம்பப்பெற்று அதில் பரம பாவனமான தெப்போத்ஸவத்தை ஜகத்தோர் ஆனந்தப் படும்படியாக நடத்தி வைத்தாயிற்று. தேனினிய அன்னமொடு தீர்த்தம் எங்கு உண்டென்று தேடி வந்து இங்கு உறைந்துள்ள எவ்வுள் பெருமலைக்கு நித்ய திருவாராதனை, திருமஞ்ஜனங்களுக்கு ப்ராசீன பத்ததிபோல் ஹ்ருத்தாபநாசனி தீர்த்தத்தால் நடத்திவர ஏற்பாடுகள் செய்தருளியாயிற்று பலசிஷ்யவர்கங்களைக்கொண்டு அநேக திருவாபரணாதி பதக்கங்களையும் மகாகண்டிகையும் ஸமர்பித்தாயிருக்கிறது.



பெரும்புதூர் வந்த வள்ளலின் மஹோத்ஸவத்தை முன்னிட்டு தேவஸ்தான ஸ்வாதீன இடங்களில் மாலையிடுதல் என்ற ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளத்திற்கிணங்க நந்தவனங்களை ஏற்படுத்த நியமனமாகி கார்யங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கு ஸ்ரீராமாநுஜ நந்தவனங்கள் என்று திருநாமம் சாற்றச்சொல்லி நியமித்தாயிற்று.

தன் ஹ்ருத்தாபத்தை போக்கிய அழகியசிங்கர்களையும் (ஸ்ரீமத் முக்கூர் மற்றும் ஸ்ரீமத் திருக்குடந்தை) தன்னடியார்கனியன் எவ்வுள் கிடந்தான் தன் திருவடிவாரத்தில் அர்ச்சாரூபியாக எழுந்தருளச்செய்து தன் நித்யநைமித்திக விசேஷ பஹுமானங்களை அனுக்ரஹித்தும் அவர்தம் திருநக்ஷத்ர தினங்களிலே தானே அவர்தம்மிடம் சென்று திருமஞ்சன புறப்பாடுகளையும் விசேஷ சாற்றுமறைகளும் கண்டருளுகிறான்.

இவ்விதமாக மன்மத ஸத்ருசனான ஸ்ரீவீரராகவனுக்கு மன்மத வருஷத்தில் அவதரித்த ஸ்ரீமத் அழகியசங்கரால் பலகைங்கர்யங்களை பண்ணப்பட்டு வருகின்றன. ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்ரீராகவனாம்மனின் அனுக்ரஹவிசேஷத்தால் பல்லாண்டு பல்லாண்டாக பாங்காய் எழுந்தருளி அனுக்ரஹிக்க வேணுமாய் தன்னடியார்க்கினியனின் திருவடி தாமரைகளில் ப்ரார்த்திக்கிறோம்.

# ஜுலை 2016 (துர்முகி ஆனி - ஆடி) உத்ஸவ விவரங்கள்

| ஆங்கில மாதம் | தமிழ் மாதம் | கிழமை | உத்ஸவம் புறப்பாடு விவரம் | காலை | மாலை |
|---|---|---|---|---|---|
| ஜுலை 1 | ஆனி 17 | வெள்ளி | தாயார் திருமஞ்ஜனம் | 9.30 | |
| | | | தாயார் புறப்பாடு | | 5.30 |
| 4 | 20 | திங்கள் | **அமாவாஸை தெப்பம் 1 ம் நாள்** | | |
| | | | பெருமாள் மூலவர், உத்ஸவர்,<br>தாயார், மூலவர், உத்ஸவர் முத்தங்கிஸேவை | | |
| | | | **பெருமாள் உத்ஸவர் முத்தங்கி ஸேவை** | மதியம் 2.00 மணிவரை | |
| | | | பெருமாள் திருமஞ்ஜனம் | | 3.30 |
| | | | பெருமாள் புறப்பாடு | | 6.00 |
| | | | திருவாதிரை உடையவர் திருமஞ்சனம் | 7.00 | |
| 5 | 21 | செவ்வாய் | **தெப்பம் 2 ம் நாள்** | | |
| | | | பெருமாள் புறப்பாடு | | 6.30 |
| 6 | 22 | புதன் | **தெப்பம் 3 ம் நாள்** | | |
| | | | நிராழி மண்டபத்தில் திருமஞ்ஜனம் | | 4.00 |
| | | | பெருமாள் புறப்பாடு | | 8.00 |
| 7 | 23 | வியாழன் | அனந்தாழ்வார் திருமஞ்ஜனம் | 7.00 | |
| 8 | 24 | வெள்ளி | **46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் திருநக்ஷத்ரம்** | 6.00 | |
| | | | அழகியசிங்கர் திருமஞ்ஜனம் | 7.00 | |
| | | | அழகியசிங்கர் புறப்பாடு | 8.30 | |
| | | | பெருமாள் திருமஞ்ஜனம் | | 3.30 |
| | | | பெருமாள் அழகியசிங்கர் மாடவீதி புறப்பாடு | | 6.30 |
| 12 | 28 | செவ்வாய் | **பெருமாள் ஜேஷ்டாபிஷேகம் / சித்ரா நக்ஷத்ரம்** | | |
| | | | திருமஞ்ஜனம் குடம் | 5.30 | |
| | | | கோஷ்டி தீர்த்தம் | | 5.30 |
| | | | **ஸுதர்சன ஜெயந்தி**<br>சக்கரத்தாழ்வார் திருமஞ்ஜனம் | 7.00 | |
| | | | மூலவர் ஸேவை | 12.00 | |
| 13 | 29 | புதன் | **ஆனி கருடன் ஆழ்வார் திருமஞ்ஜனம்** | | |
| | | | பெருமாள் கருட வாஹனத்தில் புறப்பாடு | 7.00 | |
| | | | பெருமாள், ஆழ்வார் 4-வீதி புறப்பாடு | | 6.00 |
| 15 | 31 | வெள்ளி | **தாயார் ஜேஷ்டாபிஷேகம்** | | |
| | | | திருமஞ்ஜனம் குடம் 4 வீதி புறப்பாடு | 5.30 | |
| | | | கோஷ்டி தீர்த்தம் | | 6.30 |
| 19 | ஆடி 4 | செவ்வாய் | **ஆடி கருடன் கஜேந்திரமோட்சம்** | | |
| | | | பெருமாள் கருட வாஹனத்தில் புறப்பாடு | | 6.00 |
| 22 | ஆடி 7 | வெள்ளி | 44ம பட்டம அழகிய சிங்கர் ஆராதனை | | |
| 27 | 12 | புதன் | **திருவாடிப்பூரம் 1-ம் நாள்** | | |
| | | | ஆண்டாள் திருமஞ்ஜனம் | 9.30 | |
| | | | ஆண்டாள் மாடவீதி புறப்பாடு தொடர்ந்து ஊஞ்சல் | | 5.30 |
| 28 | 13 | வியாழன் | **திருவாடிப்பூரம் 2-ம் நாள்** | | |
| | | | மாட வீதி புறப்பாடு தொடர்ந்து ஊஞ்சல் | | 5.30 |
| 29 | 14 | வெள்ளி | **திருவாடிப்பூரம் 3-ம் நாள்** | | |
| | | | மாட வீதி புறப்பாடு தொடர்ந்து ஊஞ்சல் | | 5.30 |
| 30 | 15 | சனி | **திருவாடிப்பூரம் 4-ம் நாள்** | | |
| | | | மாட வீதி புறப்பாடு தொடர்ந்து ஊஞ்சல் | | 5.30 |
| 31 | 16 | ஞாயிறு | **திருவாடிப்பூரம் 5-ம் நாள்** | | |
| | | | மாட வீதி புறப்பாடு தொடர்ந்து ஊஞ்சல் | | 5.30 |
| | | | **ஆயிரமாவது திருநக்ஷத்திர மாத உத்ஸவம்**<br>**ஸ்ரீராமாநுஜர் திருவாதிரை திருமஞ்ஜனம்** | 7.00 | |

தினசரி விச்வரூபம் காலை 6.00 மணிக்கு
**மூலவர் தரிசனம் :** காலை 6.30 முதல் 7.30 வரை, 9.00 முதல் உச்சிகாலம் 12.00 வரை
மாலை 4.00 முதல் இரவு 8.00 வரை

குறிப்பு : உத்ஸவ காலங்களில் மாறுபடும். மாற்றங்களை அந்தந்த தேதிகளில் அட்டவணையில் தெரிந்துக்கொள்ளவும்.

## ஸ்ரீராமானுஜரின் ஆயிரமாவது திருநக்ஷத்திர ப்ரதி மாத மஹோத்ஸவ விவரம்



| | |
|---|---|
| ஆனி 20-ம் தேதி திங்கள் | 2016 ஜுலை 7-ம் தேதி |
| ஆடி 16-ம் தேதி ஞாயிறு | ஜுலை 31-ம் தேதி |
| ஆவணி 12-ம் தேதி ஞாயிறு | ஆகஸ்ட் 28-ம் தேதி |
| புரட்டாசி 8-ம் தேதி சனி | செப்டம்பர் 24-ந் தேதி |
| ஐப்பசி 5-ம் தேதி வெள்ளி | அக்டோபர் 21-ம் தேதி |
| கார்த்திகை 3-ம் தேதி வெள்ளி | நவம்பர் 18-ம் தேதி |
| கார்த்திகை 30-ம் தேதி வியாழன் | டிசம்பர் 15-ம் தேதி |
| மார்கழி 27-ம் தேதி புதன் | 2017 ஜனவரி 11-ம் தேதி |
| தை 26-ம் தேதி புதன் | பிப்ரவரி 8-ம் தேதி |
| மாசி 23-ம் தேதி செவ்வாய் | மார்ச் 7-ம் தேதி |

ஸ்ரீ ராமானுஜர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம், நூற்றந்தாதி ஸேவாகாலம் சாற்றுமறை, புறப்பாடு என்று வெகு விமரிசையாக நடக்கவிருக்கும் இவ்வுத்ஸவங்களில் பக்தர்கள் திரளாகப் பங்கேற்று எவ்வுள்கிடந்தான், உடையவர் அநுக்ரஹங்களுக்கு பாத்ரர்களாகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உத்ஸவ உபயம் : ப்ரதி மாதம் ரூ. 7,250.00 திருமஞ்ஜன உபயம் ரூ. 1000.00

### ஒரு விண்ணப்பம்

ஸ்ரீராமாநுஜர் தன்னுடைய மானஸீக ஆசார்யராக ஸ்ரீ ஆளவந்தாரையே கருதினார். ஆளவந்தாரின் ஐந்து சிறந்த சீடர்களே உடையவருக்கு ஆசார்யர்களாக அமைந்தனர். பகவத்கீதையின் பேருரையின் ஸாரமே ஸ்ரீ ஆளவந்தாரின் கீதார்த்தஸங்க்ரஹம் என்கின்ற நூல். கீதார்த்த ஸங்க்ரஹத்தை ஆணிவேராகக் கொண்டு ஆலமரமாக வளர்ந்ததுதான் ஸ்ரீ ராமானுஜரின் கீதாபாஷ்யம்.

ஸ்ரீ ஆளவந்தாரின் மற்றுமொரு படைப்பு ஆகம ப்ராமாண்யம். தவறுதலாக இதை ஸ்ரீராமானுஜரின் படைப்பு என சென்ற இதழில் குறிப்பிட்டமைக்கு வருந்துகிறோம். ஸ்ரீராமானுஜதர்சனம் என்றும், ஸ்வாமிதேசிகன் ஸம்ப்ரதாயம் என்றும் பெருமையுடன் அழைக்கப்படும் ஸித்தாந்தத்தை பக்தர்களுக்கு அளிப்பதில் மேலும் கவனத்துடன் இனி செயல்படுவோம் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### தாயார் பெருமாள் வஸ்த்ர ஏலம்

ப்ரதி மாதம் இரண்டாம் சனிக்கிழமை பெருமாள், தாயார், தரித்துக்கொண்ட வஸ்த்ரங்கள் ஏலம் விடப்படும்.
இம்மாதம் 09-07-2016 தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

### வைணவ மையம்

ஒரு வருஷத்திற்கு முன்பு ஸ்ரீமதழகியசிங்கரின் அருளுடனும் அநுமதியுடனும் **வைணவ மையம்** என்ற அமைப்பு தேவஸ்தானத்தால் ஏற்படுத்தப்பட்டது. விருப்பமுள்ளவர்களுக்கு ப்ரபந்தம், ஸ்தோத்ர பாடங்கள் கற்றுத்தரப் படவேண்டும் என்பது திட்டம். உள்துறையைச் சேர்ந்த ஸ்ரீ சதீஷ் (ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவன் ஸ்வாமி) அவர்கள் மெத்தப்படித்தவர். சிறந்த ஆற்றல் படைத்தவர். அந்த ஸ்வாமி ஆவலுடன் ஆசிரியராக இருந்து கற்றுத்தரும் பணியை உடனே ஏற்றுக்கொண்டார். மையத்தில் சுமார் 20 பேர்கள் படித்துவருகிறார்கள். குதிரையை குளத்தினருகில் அழைத்துச்சென்றுவிடலாம் மேலே நம்மால் செய்யக்கூடியது ஏதுமில்லை. குதிரையே நினைத்தால் மட்டுமே நீர் பருக இயலும்.




# SRI JAIN PLYWOOD & GLASSES



No. 9/5, C.T.H. Road Road, (Near Theradi) Tiruvallur.
Ph : 27665382, 9443108327, 9380713280

## 46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் சரித்திரம்

**அவதாரம் :** ஸ்வாமி மன்மத மீ மக நக்ஷத்ரத்தில் ( 1955ம் வருஷம் ஜுலை 23ம் தேதி ) ஈச்சம்பாடி ஸ்ரீ.உ.வே. பக்தவத்ஸலாசார்யார் - ஸ்ரீமதி ராஜலக்ஷ்மிஅம்மாள் தம்பதிக்கு புதல்வனாக அவதரித்தார்.

**ஜ்ஞானம் ஸம்பாதித்தல் :** சிறுவயதில் நம் ஸ்வாமி திருவையாறு பாடசாலையில் முழுமையாக வேதாத்யயனம் பயின்றவர். **சிக்ஷா :** என்ற உச்சரிப்புக் கலை பற்றிய சாஸ்திரம் (Phonetics) **கல்பம்** என்கின்ற அனுஷ்டான முறை, நியம் விதிகள் பற்றிய சாஸ்திரம் (Rituals), **வ்யாகரணம்** என்ற இலக்கணம் (Grammar) சொல்லக்கண விவரண சாஸ்திரமான **நிருக்தம்** (Etymology), யாப்பு இலக்கணமான **சந்தஸ்** (Poetic Metre) மற்றும்

**ஜோதிஷம்** முதலிய ஷடங்கம் என்பதான ஆறு வேதாங்களையும், திருக்குடந்தை மற்றும் திருமலை ஆகிய திவ்யதேசங்களில் பல சிறந்த ஆசிரியர்களிடம் செவ்வனே கற்றார் வேதப்பகுதிகளான **ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகம்** இவைகளையும் கசடற அத்யயனம் செய்தார். இந்த ஜ்ஞானங்களை ஸம்பாதிப்பதற்கு ஸ்வாமிக்கு மிக உதவியாக இருந்த ஆசிரியர்கள் திருமலையில் ஸ்ரீலக்ஷ்மீநரஹிம்ஹ சாஸ்திரிகள், ஸ்ரீடோங்க்ரே சாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ சிவராமக்ருஷ்ண சாஸ்திரிகள், க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் முதலிய சான்றோர்கள்.

தன் மாதுலரான பருத்திச்சேரி ஸ்ரீ உ.வே. ஆராவமுதாசாரியார் ஸ்வாமியிடம் ஆஹ்நிகம், பகவத்விஷயம் காலக்ஷேபம். 44ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் திருவடியில் க்ரந்த சதுஷ்டயங்கள் காலக்ஷேபம் ஆயிற்று. அவரை ஆச்ரயித்தே ஸமாச்ரயணமும் ஆத்ம ஸமர்ப்பணமும் செய்துக்கொள்ளும் படியான பாக்யத்தைப் பெற்றார். அக்னிஹோத்ரம் ஸ்ரீ உ.வே.ராமானுஜ தாதாசார்யாரிடம் ரஹஸ்யத்ரயஸாரத்தை பயின்றார்.

**ஜ்ஞானம் கற்றுத்தரல் :** நம் ஸ்வாமி ருக்வேதி. திருக்குடந்தை பாடசாலையில் 30 வருடங்கள் அத்யாபகராக எழுந்தருளியிருந்து பலருக்கு ருக்வேத அத்யயனம் செய்து வைத்துள்ளார்.

**பிருதுகள் :** ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் தினமும் அக்னிஹோத்ரத்தை விடாமல் அனுஷ்டித்தவர். பல உயர்ந்த பிருதுகளைப் பெற்றவர். **வேதநிதி, வேதஸாகரம், வேதரத்னம், ச்ருத்யாசார கலாநிதி, ருக்வேத கல்பதரு, வேதமூர்த்தி, தசக்ரந்தி, ஸலக்ஷணகனபாடி, ஸாங்க்யாத்யாயீ, வேதபாஷ்யரத்னம், ச்ரௌதீ, த்ரிவேதி** என்ற ஸ்வாமியின் பிருதுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.



**ஆச்ரம் ஸ்வீகாரம் :** இப்படி எல்லாவிதத்திலும் தகுதி பெற்றவருக்கு, வில்லிவலம் ஸ்ரீமதழகியசிங்கரின் பேரருளால் ஸ்ரீஅஹோபிலமட ஆச்ரம ஸ்வீகாரம் 8.5.2009 அன்று ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் ஸித்தித்தது. பின் விஜய ஸ்ரீ வைகாசி மீ 9ம் தேதி வியாழக்கிழமை (23.5.2013) ஸ்வாதி நக்ஷத்ரத்தில் மிதுன லக்னத்தில் ஆஸ்தான பட்டாபிஷேகமும் நிறைவேறியது.

அன்று தொடங்கி ஸ்ரீமதழகியசிங்கரின் விஜய யாத்திரைகளும், தடையின்றி விமரிசையாக நடைபெற்று வருகின்றன. ஸ்ரீமதழகியசிங்கர் பல்லாண்டு திடஆரோக்யத்துடன் எழுந்து அருளியிருந்து நம் யாவருக்கும் ஹிதஉபதேசங்களை அனுக்ரஹித்தருளவேண்டும் என்று இந்நன்னாளில் ஸ்ரீ வீரராகவனைப் ப்ரார்த்திப்போம்.


Cell : 9444672723

உ
ஓம் நமசிவாய

K.S. TRADERS
KRISHNA STEEL TRADERS

ஸ்டீல், சிமெண்ட், மணல், ஜல்லி வியாபாரம்

Plot No. 1200, TNHB Bye Pass Road, Thiruvallur - 602 001.

## Evvul Kidandhan, the most Compassionate.

C.C.Sampath

Most of that tiny village is farmers and very few with basic education went for jobs in Thiruvallur, the abode of Sri Evvul Kidandhan. Sridharan lived there with his wife Vasumathi and 10 years old Kannan. The boy was studying at Thiruvallur. Daily, Sridharan dropped Kannan at the School and spend the day under a tree inside the sub court. As translator and writer for the needy, he earned a meager amount daily. In the evening he cycled back home with his son. Every Friday Vasumathi joined them to have darshan of Veeraraghavan and also to be present at the Friday-Thirumanjanam of Kanakavalli Thaayar.

Traditionally Sri Veeraraghavan was their family deity. Every visit the couple prayed, *"Amma! Kanakavalli! Please ensure best education and good future for our only son, Kannan. with our present life. Though we are not rich, we have been bestowed by evvul Kidandhan a state of contentment and we are happy. Our only desire is Kansan's future."*

Kannan studied well and was ready to enter the college, for which he had to go to Chennai. Vasumathi rushed to the temple and prayed deeply with her husband and son by her side. Srimad Azhagiyasingar, Hereditary Trustee of the Temple was also camping at Sri Ahobila Math. The couple along with their son prostrated before him, expressed their desire and sought his blessings also.

On hearing the details, Srimad Azhagiyasingar smiled and said, "My blessings are there. But they are superfluous. Sri Malolan and Evvul Kidandhan have decided to fulfill what they wanted".

Thus saying he addressed the elderly person next to him. *" oye! Krishnamachariar! Did you see? Malolan has got two mangoes in single hit. Did you expect this to happen? Here you have powerful deities of two Divya Desams, Thiruvallur and Ahobilam. You must know Malolan's Abode is Ahobilam, who, out of compassion to the mankind, is travelling with this servant. And this place is the abode of Sri Vaidhya Veeraraghavan. Are you happy now?"* Then he addressed Sridharan and Vasumathi,

*and give them education as long as he wants to study. I know you both as the most ideal and contented couple. You can be rest assured. Your son can stay at his House and study. Krishnamachriar and mami are most endearing couple. You can visit your son any time and leave him there as long as he wants to study."* Swamy Vedanta Desikan addresses the Lord like this:

*"If you decided to protect and promote one, who else can interfere with such help.*
*If you have decided not to protect one, who else can protect him."*

Thus blessing, the Jeer retired for the day. Kannan, the most studious student, embraced his parents and wept.

After the blessings of Srimad Azhagiyasingar, there was no looking back for Kannan. Staying with his guardian Sri Krishnamachriar Swamy he qualified himself with bountiful degrees and entered Indian Railway Service and attained the pinnacle of status and position. All these years he never forgot the sacrifices by his parents and the parental affection of the old couple at Chennai. Nor did he forget the compassion bestowed on him by the Divya Dhampath-s of Ahobila math and Thiruvallur.

He tried his best, in vain, to convince his parents to live with him. But they were reluctant to leave Thiruvallur and wanted to be with Evvul Kidandhan. At the ripe time, having lived together for more than half a century, happy and contented, they were mentally prepared to shred the mortal body. They had the last darshan of Sri Veeraraghavan.

Kannan reached his ancestral home with his wife and children, in time to bid farewell to his parents. He was irrevocably sad due to the guilty feeling that he was not given the opportunity to look after his parents during their last days. As though reading his mind, a srimukam from HH Srimad Azhagiyasingar arrived, with the following message.

*"You splendidly fulfilled their desire by elevating yourself to an appreciable position. Lord is supreme and decides on our behalf. Your parents stayed back because of their unsurpassed devotion to Evvul Kidandhan. Now turn your attention towards your children and their welfare. That is the only way to discharge your duty to your parents".* Kannan turned to his children, embraced them and wept.

Now he is a regular visitor to the temple. He lives contented with his loving wife. Both are gracefully aging, with their children prospering elsewhere in the world, all the time thinking of their parent and praying to Sri Vaidhya Veeraraghavan.



**Nature Symbolises our inseparable Relationship with the Lord**

## 6-7-2016 புதன் ஆனி தெப்பம் 3ம் நாள்



பெரியகுளத்தில் நீர் நிரம்பியபிறகு முதல்முறையாக பெருமாள் ஜுலை 6-ம் தேதி குளத்தின் நடுவே நீராழி மண்டபத்தில் எழுந்தருளி திருமஞ்ஜனம் கண்டருளுகிறார். யாவரும் திருக்குளத்திற்கு வந்து எவ்வுள் கிடந்தான் அனுக்ரஹத்திற்கு பாத்ரர்களாக வேண்டும்.

### திருமலையில் ஸ்ரீமதகியசிங்கருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு







நம் தேவஸ்தானத்தின் பரம்பரை தர்மகர்த்தாகவும், ஸ்ரீ அஹோபில மடத்தின் 46ம் பட்டம் பீடாதிபதியுமான ஸ்ரீமதழகியசிங்கர் ப்ரியசிஷ்யர்களால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கும் தன் அறுபத்தொன்றாவது திருநக்ஷத்ர மஹோத்வத்தை முன்னிட்டு திருமலை எழுந்தருளும்போது ஸ்வாமிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. திருமலையில் ஜுலை 8ம் நாள் ஆசார்ய பெருந்தகையின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருவேங்கடமுடையான் திருவடிநிழலில் விமரிசையாக நடக்கவிருக்கிறது. ஸ்வாமிக்கு நீண்ட ஆயுள் ஆரோக்யத்தை அருளி அனுக்ரஹிக்குமாறு ஸ்ரீ எவ்வுள்கிடந்தானிடம் ப்ரார்த்திப்போம்.

# பெரியாழ்வார் போற்றும் வீரராகவன்

**ஸ்ரீ உ.வே. பேரங்கியூர் ஸ்ரீனிவாஸராகவன் ஸ்வாமி**



விஷ்ணுசித்தர் என்னும் பெயர் பெற்ற பெரியாழ்வார் ஸ்ரீவீரராகவனின் மீது பக்தி கொண்டு அருளிச் செய்ததான நெய்குடத்தைப் பதிகத்தின் 2.ம் பாசுரத்தின் விளக்கத்தினை ரசித்து வீரராகவனின் அருளைப்பெற்று ஆனந்தம் அடையலாம் வாருங்கள்.

பெரியாழ்வார் திருமொழி 5ம் பத்து 2ம் தசகம் நெய்குடத்தை பற்றிப்பதிகத்தின் 2ம் பாசுரம்

சித்திரகுத்தன் எழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி
வைத்த இலச்சினை மாற்றி தூதுவர் ஓடி ஒளித்தார்
முத்துத் திரைக்கடல் சேர்ப்பன் மூதறிவாளர் முதல்வன்
பத்தர்க்கமுதன் அடியேன் பண்டன்று பட்டினம்காப்பே,

***இப்பாசுரத்தில் ஸ்ரீவிஷ்ணுசித்தரான பெரியாழ்வார்***

"எமதர்ம ராஜனின் மந்திரியான சித்ரகுப்தன், தென்திசையின் நாயகனும் தம்முடைய தலைவனுமான கூற்றுவனின் (எமன்) ஒப்புதலெழுத்தை வாங்கி பாபங்களை எண்ணி எண்ணி எழுதி வைத்திருந்த அடியேனுடைய கணக்கு ஓலையை, எமனின் கிங்கரர்கள் (Servants) கிழித்து எறிந்து விட்டு ஓடிப் போய் எங்கோ ஒளிந்து விட்டார்கள்,

ஏனெனில் அழகியதான முத்துக்களை தன்னுடன் எடுத்து வந்து வீசுகின்ற அலைகளை உடைத்தான கடலினுள்ளே திருக்கண்கள் வளர சயனத்திருப்பவனும் முதிர்ச்சி அடைந்த அறிவினை உடையவர்களான நித்யசூரிகளின் தலைவனும். தன் பக்தர்களுக்கு அமுதம் போன்று இனிமையையே உடைய, தன்னடியார்க்கினியன் எந்தை எம்பெருமான் எவ்வுள் கிடந்தானுக்கு அடியேன் தாசனாக உள்ளேன். ஆதலால் அடியேனின் உடம்பானது ஸ்ரீவைத்ய வீரராகவனின் வாசஸ்தலமாக உள்ளது அடியேனுடைய ஆத்மாவானது பழைய நிலையில் இல்லாமல் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. ஸ்ரீவீரராகவனால் ரக்ஷிக்கப்படுகின்றது" என்று அருளிச் செய்கிறார்,

இங்கு "பக்தர்களுக்கு அமுதம் போன்று இனிய சுவையுடன் இருப்பவன்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்தையே, திருமங்கையாழ்வார் தம்முடைய வீரராகவன் விஷயமான காசையாடைப் பதிகத்தின் கண் "தன்னடியார்க்கு இனியன்" என்று வழி மொழியும் அழகு ஸ்ரீவீரராகவனின் விஷயத்தில் ரசிக்கத்தக்கதாக அமைகின்றது.

(தொடரும்)

## பெரியாழ்வார் திருவடிகளே சரணம்



## இலவச மருத்துவ முதலுதவி முகாம்

திருவள்ளூர் ரோடரி சங்கம், அரசு பொது மருத்துவமனை மற்றும் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம் ஆக மூன்று ஸ்தாபனங்களும் சேர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக திருக்கோயில் வளாகத்தில் பிரதி அமாவாஸ்யை திரளாக வருகைத்தரும் பக்தர்கள் நலனைக்கருதி இலவச மருத்துவ முதலுவி முகாம் நடத்திவருகின்றன. ஜுலை 3ம் தேதி மூன்றாம் ஆண்டு துவக்க விழா கொண்டாடப்பட்டது. ரோடரி சங்கத்தின் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவினர் வந்திருந்து விழாவை நடத்திக்கொடுத்தனர்.

Web : www.svdtiruvallur.com Email : yesveedeetvr@gmail.com